## இனிமையான குழந்தைகளே! இந்தப் பழைய உலகம் இப்போது மண்ணோடு மண்ணாகி அழிந்து போய்விடும். ஆகையினால் இந்த மண்ணுக்குள் போகப்போகும் உலகத்திலிருந்து தன்னுடைய புத்தியின் தொடர்பை விலக்கி விடுங்கள்.

கேள்வி: மனிதர்களின் எந்த ஆசையை, ஒரு பாபாவால் மட்டும் தான் நிறைவேற்ற முடியும்?

பதில்: மனிதர்கள் அமைதி வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் அமைதியற்றவர்களாக ஆக்கியது யார்? என்பது தெரிவதில்லை. 5 விகாரங்கள் தான் அமைதியற்றவர்களாக ஆக்கி விட்டது என்று நீங்கள் அவர்களுக்குச் சொல்கிறீர்கள். பாரதத்தில் எப்போது தூய்மை இருந்ததோ, அப்போது அமைதி இருந்தது. இப்போது பாபா மீண்டும் தூய்மையான இல்லற மார்க்கத்தை ஸ்தாபனை செய்கிறார். அங்கே சுகம், சாந்தி அனைத்தும் இருக்கும். முக்தி-ஜீவன் முக்திக்கான வழியை பாபாவைத் தவிர யாரும் சொல்ல முடியாது.

பாடல்: இந்த பாவம் நிறைந்த உலகத்திலிருந்து........

ஓம் சாந்தி. இது யாருடைய சத்சங்கம்? மனிதர்கள் சத்சங்கங்களுக்கு செல்கிறார்கள் என்றால், யாராவது ஒரு சாது, சன்னியாசி, மகாத்மா போன்றவர்கள் கதியில் (குருக்கள் அமரும் பீடம்) அமர்ந்து சாஸ்திரம் போன்ற வற்றைச் சொல்கிறார்கள், ஆனால் அங்கே எந்தவொரு குறிக்கோளும் இருப்பதில்லை. சத்சங்கத்தினால் என்ன பலன் என்று யாருக்கும் தெரியாது. அந்த குருவை பின்பற்றுபவர்கள் மட்டும் தான் அவரிடம் வருகிறார்கள் என்பதும் கிடையாது. இல்லை, யாருக்கு வேண்டுமோ அவர்கள் சென்று அமர்ந்து கொள்கிறார்கள், பின்பற்று பவர்களோ அல்லது யாராக இருந்தாலும், வேற்று தர்மத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி. இந்த மகாத்மா வந்திருக்கிறார், என்று தெரிந்தவுடன் ஓடிவிடுகிறார்கள். அதைத் தான் சத்சங்கம் என்று சொல்லப்படுகிறது. மகாத்மா போன்றவர்கள் ஏதாவதொரு வேத-சாஸ்திரத் தின் விஷயங்களைத் தான் புரிய வைக்கிறார்கள். உண்மை யில் சத்தியமான பரமாத்மாவோ ஒருவரே ஆவார். மற்றவை அனைத்தும் மனிதர்களின் சங்கமாகும். சத்தியமான பரமாத்மா தான் நரனிலிருந்து நாராயணன் ஆவதற்கான சத்தியமான கதையைச் சொல்கிறார். சத்திய நாராயணனின் கதை பௌர்ணமி நாளில் நடக்கிறது. உண்மையிலும் உண்மையான பௌர்ணமி நாள், இரவிலிருந்து பகலாகக்கூடிய இது தான் (சங்கமயுகம்), என்பதை குழந்தை களாகிய நீங்கள் தெரிந்துள்ளீர்கள். 16 கலைகள் நிரம்பியவர்களாக ஆகின்றீர்கள். உண்மையில் ஞான சூரியனுக்கு ஒருபோதும் கிரகணம் பிடிக்க முடியாது. பூமிக்கு வெளிச்சம் கொடுக்கக் கூடிய இந்த சூரிய-சந்திரன் போன்றவைகளுக்கு கிரகணம் ஏற்படுகிறது. ஞான சூரியனோ அனைவருக்கும் ஒளியைக் கொடுப்பவராக இருக்கின்றார். அவருடைய மகிமையைத் தான், ஞான சூரியன் பிறந்தது அஞ்ஞான இருள் விலகியது..... என்று பாடுகிறார்கள். இங்கேயோ நீங்கள் அனைவரும் குழந்தைகள் அமர்ந்துள்ளீர்கள். வெளியிலிருப்பவர்கள் அனுமதிக்கப் படுவதில்லை. அவர்கள் எதையும் புரிந்து கொள்ள மாட்டார்கள். பாபா கூறுகின்றார், நான் குழந்தைகளாகிய உங்கள் முன் தான் வருகின்றேன், வந்து

பாவ ஆத்மாக்களை புண்ணிய ஆத்மாக்களாக மாற்றுகின்றேன், கோவிலில் இருக்கத் தகுதியானவர்களாக ஆக்கு கின்றேன். அது (சொர்க்கம்) தூய்மையான உலகம் சிவாலயமாகும். சிவன் சொர்க்கத்தைப் படைத்தார், அதில் யார் இருக்கிறார்கள்? யாருடைய சிலைகளை கோவில்களில் வைக்கிறார்களோ அந்த தேவி-தேவதைகள் இருக்கிறார்கள். 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்த தேவி-தேவதைகள் பாரதத்தில் இருந்தார்கள், சொர்க்கத்தில் இராஜ்யம் செய்தார்கள், என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர் கள். எப்பொழுது இராஜ்யம் செய்தார்கள், எப்படி இராஜ்யத்தை அடைந்தார்கள், என்பதை உலகம் தெரிந்திருக்கவில்லை.குழந்தைகளாகிய நீங்கள் தெரிந்துள்ளீர்கள், அது புதிய உலகமாக இருந்தது, இது பழைய உலகமாக இருக்கிறது. புதிய உலகம், புதிய பாரதம் வேண்டும், உலக சர்வசக்திவானுடைய இராஜ்யம் வேண்டும் என்று பாரதவாசிகள் சொல்கிறார்கள். இங்கே தேவி-தேவதை களின் இராஜ்யம் இருந்தது என்று ஆத்மாக்களின் புத்தியில் வருகிறது. ஆனால் சர்வசக்திவானின் இராஜ்யம் எப்பொழுது யார் ஸ்தாபனை செய்தது என்பது பாவம் இவர் களுக்குத் தெரியாது. ஏதோ ஒரு காலத்தில் இருந்தது. பாரதம் தங்கக் குருவியாக இருந்தது என்பதைத் தெரிந்துள்ளீர்கள். இப்போது நீங்கள் யாருடைய சங்கத்தில் (சேர்க்கையில்) அமர்ந்துள்ளீர்கள்? எந்த மகாத்மா (சாமியார்) வந்திருக்கிறார்? பகவானுடைய மகாவாக்கியம், நான் உங்களுக்கு இராஜயோகம் கற்றுத் தருகின்றேன், என்று ஸ்ரீகிருஷ்ணர் ஒன்றும் சொல்ல மாட்டார். குழந்தைகளாகிய உங்களுடைய புத்தியின் பூட்டு இப்போது திறந்து கொண்டது, இவ்வளவு முழு பழைய உலகமும் மண்ணோடு சேர்ந்து மண்ணாகி விடும், என்பதைத் தெரிந்துள்ளீர்கள். மனிதர்கள் அமைதியை வேண்டுகிறார்கள், ஆனால் யார் அமைதியை ஸ்தாபிக்க முடியும்? உங்களை அமைதியற்றவர்களாக ஆக்கியது யார்? என்று முதலில் கேட்கப் படுகிறது. இந்த ஐந்து விகாரங்கள் தான் அமைதியற்றவர்களாக ஆக்கியது, என்று எதுவும் சொல்ல முடியாது. பாரதத்தில் தூய்மை இருந்தபொழுது தான் அமைதி இருந்தது. தூய்மை யான குடும்ப மார்க்கத்தில் தான் மனிதர்கள் மிக-மிக சுகமுடையவர்களாக இருந்தார்கள். இப்போது அபவித்திரமான, தூய்மையற்ற குடும்ப மார்க்கமாகிவிட்டது. அடையாளங்கள் கூட இருக்கின்றன -- நாங்கள் கீழானவர்கள் பாவிகள், நாங்கள் குணமற்றவர்கள், எங்களிடம் குணங்கள் எதுவும் இல்லை என்று, கோவில்களில் தேவதைகளின் மகிமை பாடுகிறார்கள். மனிதர்கள் பாடுகிறார்கள் ஆனால் தெரிந்திருக்கவில்லை. எப்போது பாபா வருகிறாரோ அப்போது தான் குழந்தைகளிடத்தில் முயற்சி செய்கிறார். பாபா குழந்தைகளிடத்தில் தான் வருகின்றார். இங்கே சாது-சன்னியாசி போன்ற யாரும் அமர்ந்திருக்கவில்லை. உங்களுடைய பார்வை மேலே இருக்கிறது. நாம் சிவபாபாவிடமிருந்து கேட்கிறோம். எந்த தேகதாரியின் பக்கமும் பார்வை இல்லை. கிருஷ்ணர் கூட தேகதாரி குழந்தை, கர்பத்தின் மூலம் பிறவி எடுக்கிறார். ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அதனுடைய தேகம் இருக்கிறது. சிவபாபாவிற்கு அவருடைய தேகம் இல்லை. தேகத்திற்குத் தான் பெயர் வைக்கப்படுகிறது. ஆத்மாவிற்கு பெயர் ஆத்மாவே ஆகும். மகான் ஆத்மா, பாவ ஆத்மா என்றும் சொல்கிறார்கள். பாவ பரமாத்மா என்று ஒருபோதும் சொல்லப்படுவதில்லை. பிறகு தங்களை பரமாத்மா என்று எப்படி சொல்ல முடியும்? பரமபிதா பரமாத்மா ஒருவரே ஆவார். அவர் பரம தந்தை, பரந்தாமத்தில் இருக்கின்றார். பரம ஆத்மா, சுப்ரீம் (நன்ல்ழ்ங்ம்ங்) அவர் நிராகாரமானவர், என்று நீங்கள் கூறுகின்றீர்கள். அதைச் சேர்த்து பரமாத்மா,

என்று பெயர் வந்து விட்டது. அவரைத் தான் அனைவரும் நினைவு செய்கிறார்கள். கண்ணில்லாதவர்களுக்கு வழிகாட்டுங்கள் பிரபுவே, எனும்போது புத்தி மேலே பரமபிதாவின் பக்கம் சென்று விடுகிறது. அனைத்து இரகசியங் களையும் சொல்லக்கூடியவர் அந்த பரமபிதா பரமாத்மாவே ஆவார். நிர்வாண தாமத்தை (சப்தமற்ற இடம்) முக்திதாமம் என்று சொல்லப்படுகிறது. எந்தெந்த ஆத்மாக்கள் முதல்-முதலில் வருகிறதோ அவை ஜீவன் முக்தியில் இருக்கின்றது, பின்னால் பிறகு ஜீவன் முக்தியிலிருந்து ஜீவன் பந்தனத்தில் வருகிறது. தூய்மை, சுகம், அமைதி அனைத்தும் சத்யுகத்தில் ஒரு இராஜ்யம் இருக்கும்போது இருக்கிறது, என்பதை குழந்தைகள் தெரிந்துள்ளீர் கள். அதனை அத்வைத (ஒரு வழி) இராஜ்யம் என்று சொல்லப்படுகிறது. பிறகு துவைத (பல வழி) இராஜ்யம் அதாவது சாத்தானின் இராஜ்யம் நடக்கிறது. முதலில் ஒரு தர்மம் இருந்தது, இப்போதோ அனேகனேக தர்மங்கள் இருக்கின்றன. இந்த முழு சிருஷ்டி சக்கரத்தையும் குழந்தைகள் வரிசைகிரமமான முயற்சியின் படி தெரிந்துள்ளீர்கள். வேறு எங்கும் குறிக்கோள் இல்லை.

இந்த மரத்தின் விதை ரூபமான பரமாத்மா மேலே இருக்கின்றார், என்பதை குழந்தை களாகிய நீங்கள் தெரிந்துள்ளீர்கள். முதல்-முதலில் சத்யுகத்தின் படைப்பு நடக்கிறது. பிறகு சத்யுகத்திலிருந்து திரேதாயுகமாகிறது. முழு உலகமும் பழையதாக தமோபிரதானமாக ஆகத்தான் வேண்டும். இப்போது நீங்கள் பழைய உலகத்தில் இருக்கின்றீர்கள். புதியது என்று சொல்ல முடியாது. புதியதாக சத்யுகத்தில் இருந்தது, கலியுகத்தை பழைய உலகம் என்று சொல்லப்படுகிறது. பழையதாக ஆவதற்கு தான் நேரமாகிறது. முதலில் புதியதாக இருந்தது இப்போது பழையதாக இருக்கிறது. புதிய உலகமாக ஆக வேண்டும், அதில் புதிய பாரதம் வேண்டும், என்று பாரதத்தில் அனைவரும் இன்றைக்கு விரும்புகிறார்கள். உலக சர்வ சக்திவானின் இராஜ்யம் நடக்க வேண்டும். தேவி தேவதைகளின் இராஜ்யத்தை சர்வசக்திவான் தான் ஸ்தாபனை செய்திருந்தார். அந்த சமயத்தில் வேறு எந்த இராஜ்யமும் இருக்க முடியாது. ஒவ்வொரு மனிதனும் சர்வசக்திவானாக அதாவது ஞானக்கடலாக இருக்க முடியாது. ஞானத்தின் கடல், சுகத்தின் கடல்............ இந்த மகிமை ஒரு பரமாத்மாவினுடையதாகும். உங்களுக்கு ஆஸ்தி கூட அவரிடத்திலிருந்து தான் கிடைக்கிறது. நான் கல்பம்-கல்பமாக வருகின்றேன், வந்து இந்த பாரதத்தை சொர்க்கமாக மாற்றுகின்றேன், என்று பாபா அவரே கூறுகின்றார். அரைகல்பத்திற்கு பிறகு அந்த இராஜ்ய பாக்கியத்தை இழக்கின்றீர்கள், மாயை யிடம் தோல்வி அடைந்து விடுகிறீர்கள். மனதிடம் தோல்வி அடைவதற்கான விஷயம் இல்லை. மனம் முற்றிலும் குதிரையாக ஆகிவிடுகிறது, மாயை மனதை தூக்கி விடுகிறது. மாயை கூட சொல்கிறது -- ஆஹா, நம்முடைய சேனையிலிருந்து யாரும் அங்கே எப்படி செல்ல முடியும்? நல்ல-நல்ல மகாரதிகளைக் (போரை வழி நடத்திச் செல்பவரை மகாரதி என்று சொல்லப்படுகிறது) கூட வென்று விடுகிறது (மாயை). உங்களுடையது மாயையுடனான யுத்தமாகும். மற்றபடி ஸ்தூல ஆயுதங்களின் மூலம் சண்டையிடும் விஷயம் ஒன்றும் கிடையாது. இது மாயையுடன் வெற்றி அடைவதற்கான யுத்தமாகும். மற்றபடி அந்த சண்டைகள் (ஸ்தூல ஆயுதங்களை வைத்து நடக்கும் போர்) நடந்து கொண்டு தான் வந்துள்ளது. முதலில் வாள்கள் இருந்தன, பிறகு துப்பாக்கிகள் வந்தது, இப்போதோ

குண்டுகள் வந்திருக்கின்றன.

ஆக நாம் தேவி-தேவதைகளாக இருந்தோம், என்பது குழந்தைகளாகிய உங்களுடைய புத்தியில் வந்திருக்கிறது. வேறு எந்த சத்சங்கங்களிலும், நாம் தான் தேவதைகளாக இருந்தோம், நாம் 84 பிறவிகள் எடுத்திருக்கிறோம், என்று சொல்ல மாட்டார்கள். இப்போது நாம் தூய்மையற்றவர் களாக ஆகிவிட்டோம், பிறகு இப்போது தூய்மையாகிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் கூட கண்ணில்லாதவர்களாகத் தான் இருந்தீர்கள், இந்த ஸ்தூல கண்களின் விஷயம் இல்லை. இது ஞானத்தின் தெய்வீக கண்ணின் விஷயமாகும். ஆத்மா தன்னுடைய தந்தையை மறந்து விட்டது. சன்னியாசிகளோ ஆத்மா தான் பரமாத்மா ஆகிறது, என்று சொல்லிவிட்டார்கள். பாபா தான் வந்து மூன்றாவது கண்ணைத் திறக்கின்றார். அவர்கள் பிறகு தேவதைகளுக்கு மூன்றாவது கண்ணை காட்டுகிறார்கள், எப்படி விஷ்ணுவிற்கு அலங்காரங்கள் காட்டியிருக் கிறார்களோ, அதுபோல் தேவதை களுக்கு மூன்றாவது கண்ணைக் கொடுத்து விட்டார்கள். ஆனால் அவர்களுக்கு (தேவதைகளுக்கு) மூன்றாவது கண் திறப்பதே இல்லை. ஒருவேளை சத்யுகத்தில், நாம் கீழே இறங்கிக் கொண்டே செல்வோம், பிறகு நாம் நரகவாசி ஆகி விடுவோம், என்ற ஞானம் இருந்தால், இராஜ்ஜிய பாக்கியத்தின் குஷியே போய் விடும். இந்த ஞானம் இப்போது தான் இருக்கிறது. நாம் 5 ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு பாபாவிடம் வந்திருக்கிறோம் மீண்டும் தங்களுடைய இராஜ்ய பாக்கியத்தை அடைவதற்கு, என்பதை இனிமையிலும்-இனிமையான காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகள் தெரிந்துள்ளீர்கள். பிறகு 5 ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு நாம் வர வேண்டும். நாம் ஆல்ரவுண்டு (ஆப்ப் ழ்ர்ன்ய்க் ஆஐீற்ர்ழ்ள்) நடிகர்களாவோம். நாம் தான் தேவதைகளாக ஆகியிருந்தோம், நாம் தான் சத்திரியர்களாக ஆனோம், பிறகு இப்போது நாம் தான் பிராமணர்களாக ஆகியுள்ளோம். இந்த ஞானம் யாருக்கும் இல்லை. கீதா பாடசாலை என்றால் பகவானின் பாடசாலையாகும். பகவானுடைய மகாவாக்கிய மாகும். அவர்கள் பிறகு கிருஷ்ணருடைய பெயரைப் போட்டு விட்டார்கள். கிருஷ்ண பகவானுடைய மகாவாக்கிய மாக ஒருபோதும் ஆக முடியாது. அவர் குழந்தையாக இருந்தார். அவர் மீது எவ்வளவு களங்கத்தை சுமத்தியிருக்கிறார்கள் -- இவ்வளவு குழந்தைகள் இருந்தார்கள், இவ்வளவு இராணிகளைக் கூட்டிச் சென்றார்! இங்கே நீங்கள் அனைவரும் நீங்களாகவே தான் ஓடி வந்துள்ளீர்கள், யாரும் உங்களை விரட்டவில்லை. அரசாங்கத்தில் யாராவது விரட்டினாலும் கூட கேஸ் நடக்கும். இவர்களுக்கு ஆச்சர்யமாகி விட்டது, எவ்வளவு குழந்தைகள் வந்தார்கள், பட்டி உருவாகியது. வயதானவர்கள், இளைஞர்கள், குழந்தைகள் அனைவரும் ஓடி வந்து விட்டார்கள். சிலர் குடும்பம் குடும்பமாகக் கூட வந்தார்கள். ஆக இங்கே நடந்த விஷயங்களை கிருஷ்ணரோடு சேர்த்து தலை கீழாக எழுதி விட்டார்கள். நாளேடுகளில் மிக விமரிசனம் வந்தது. ஒரு கல்கத்தா வைர வியாபாரி எனக்கு 16108 இராணிகள் வேண்டும் என்கிறார், இப்போது 400 பேர் கிடைத்திருக் கிறார்கள், என்று அமெரிக்க நாளேட்டிலும் கூட வந்தது. ஆக இவையனைத்தும் விளையாட்டாகும். எதுவும் புதிதல்ல. கல்பத்திற்கு பிறகும் கூட இதுபோல் நடக்கும். இதுபோலவே உங்களுடைய பட்டியும் உருவாகும். எப்படி ஸ்தாபனை நடக்கிறது என்று நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் மனிதனிலிருந்து தேவதை ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். ஜீவன் முக்தியை

வழங்கும் வள்ளலை தங்களுடையவராக மாற்றுவதின் மூலம் நீங்கள் ஆஸ்தியை அடைவதற்கு உரிமையுடையவர்களாக ஆகின்றீர்கள். ஜனகருக்கும் கூட ஒரு வினாடியில் காட்சி ஏற்பட்டது. எங்களுக்கு ஜனகருக்கு கொடுத்தது போல் ஞானம் கொடுங்கள். என்று கூறுகிறார்கள். ஜனகரோ திரேதாயுகத்தில் இராஜ்யம் அடைந்தார்.

பாபா முதன் -முதலில் புரிய வைத்தார், நமக்கு முன்னால் யார் அமர்ந்திருப்பது, என்பது இப்போது குழந்தைகளாகிய உங்களுடைய புத்தியில் இருக்கிறது. சிவனின் கோவிலுக்கு முன் எருதை வைத்து விட்டார்கள். எருதின் மீது மனிதர்கள் அமருவார்கள். நிராகார சிவன் எப்படி அமருவார்? எனவே பிறகு சங்கரை அமரவைத்து விட்டார்கள். எதையும் புரிந்து கொள்வதே இல்லை. கண்ணில்லாதவர்களுக்கு வழி காட்டுங்கள் பிரபுவே........என்று பாட்டில் கூட கேட்டீர்கள், அனைவரும் புத்தியில்லாத குருடர்களாக இருக்கிறார்கள். பிரஜைகளின் மீது பிரஜைகளின் இராஜ்யமாக இருக்கிறது. முன்பெல்லாம் இராஜாக்கள் இராஜ்யம் செய்தார்கள். யாராவது கடுமையான பாவ கர்மம் செய்தால் இராஜா தீர்ப்பு வழங்கினார். இப்போதோ பிரஜைகளின் மீது பிரஜைகளின் இராஜ்யமாகும். ஒருவர் மற்றவருக்கு மேல் நீதிபதி இருக்கிறார். அதிசயமாக இருக்கிறது அல்லவா? இது எல்லையற்ற நாடகமாக இருக்கிறது. இதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள் வேறு யாரும் சொல்ல முடியாது. பேன் ஊருவது போல் இந்த நாடகம் நடந்து கொண்டே இருக்கிறது. உலகத்தின் சக்கரம் சுற்றிக் கொண்டே இருக்கிறது. இந்த உலகத்தின் வரலாறு-புவியியலை யாரும் தெரிந்திருக்கவில்லை. ஒவ்வொரு இலையும் கூட ஈஸ்வரனின் கட்டளைப்படி தான் அசைகிறது என்று கூறுகிறார்கள். ஆனால் இது நாடகமாகும். ஈ இங்கிருந்து கடந்து சென்றது என்றால் கல்பத்திற்குப் பிறகும் திரும்பவும் நடக்கும். நாடகத்தை புரிந்து கொள்ள வேண்டும். மனிதர்கள் தான் புரிந்து கொள்வார்கள். பாபா எவ்வளவு நல்லவிதத்தில் புரிய வைக்கிறார். பாபா உலக சர்வசக்திவானாக இருக்கின்றார். நானும் நாடகத்தின் பந்தனத்தில் கட்டுப் பட்டிருக்கிறேன், என்று கூறுகிறார். நான் நானாகவே வந்து தூய்மை யற்றவர்களை தூய்மையாக்குகின்றேன். இப்போது நீங்கள் பாபாவிடமிருந்து மாயையை வெல்வதற்கு சக்தியை அடைகிறீர்கள். மாயை எதிரி உங்களை முற்றிலும் எதுவும் இல்லாதவர்களாக ஆக்கிவிட்டது, ஆரோக்கியமும் இல்லை, செல்வமும் இல்லை. நாம் உலகத்திற்கு எஜமானர்களாக ஆகிறோம் என்று, நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். அங்கேயோ (சத்யுகத்தில்) ஆரோக்கியம், செல்வம், சந்தோஷம் அனைத்தும் இருக்கும்.

வந்து வழி சொல்லுங்கள், இரக்கம் காட்டுங்கள், வந்து முக்தி-ஜீவன்முக்தியைக் கொடுங்கள், என்று பரமாத்மாவிடம் தான் சொல்கிறார்கள். ஆத்மா தான் அழைக்கிறது -- ஓ பாபா, வந்து எங்களை துக்கத்திலிருந்து விடுவித்து சொர்க்கத்தில் சுகமுடையவர்களாக ஆக்குங்கள். துக்கத்தை நீக்குபவர், சுகத்தை வழங்குபவர், என்றும் பாடப்பட்டுள்ளது. பாபா சுகம் கொடுக்கிறார், பிறகு அவரை சொர்க்கத்தில் நினைவு செய்வதற்கான அவசியம் இருப்பதில்லை. அனைத்து குழந்தைகளையும் சுகமானவர்களாக ஆக்கி விடுகிறார். முன்பெல்லாம் 60 வயதில் குழந்தைகளுக்கு இராஜ்ய-பாக்கியத்தைக் கொடுத்து விட்டு அவர்கள் வானப்பிரஸ்தம் சென்று விடுவார்கள். ஆகவே எல்லையற்ற தந்தை கூட சொல்கிறார் -- மாயை உங்கள் அனைவரை யும் துக்கமுடையவர்

களாக ஆக்கிவிட்டது என்பது எனக்குத் தெரியும், எனவே இப்போது உங்களை அழைத்துச் செல்ல வந்திருக்கின்றேன். நிர்வாணதாமம் (சப்தமற்ற உலகம்) அல்லது வானப்பிரஸ்தம், இரண்டும் ஒரே விஷயம் தான். வானப்பிரஸ்தம் என்றால் சப்தத்தைக் கடந்த இடம் இனிமையான அமைதி நிறைந்த வீடாகும். பிறகு தங்களுடைய இனிமையான இராஜ்யத்திற்கு வருவீர்கள். இப்போதோ துக்கம் நிறைந்த இடமாக இருக்கிறது. நாங்கள் சுயதரிசன சக்கரதாரிகளாக ஆகிறோம் மேலும் மற்றவர்களையும் ஆக்கிக் கொண்டே இருக்கிறோம், என்று நீங்கள் கூறுகிறீர்கள். கடைசியில் தான் சம்பூரணமாக (முழுமையானவர் களாக) ஆவீர்கள். விஷ்ணு அல்லது கிருஷ்ணர் தான் சுயதரிசன சக்கரதாரி, என்று கூறுகிறார் கள். இது எப்படி ஆக முடியும்? இந்த விஷயங்களை நீங்கள் தான் புரிந்து கொள்ள முடியும். சுயதரிசன சக்கரதாரிகளுக்கு போதை இருக்க வேண்டும் -- சிவபாபா நம்மை சுயதரிசன சக்கரதாரியாக்குகிறார். நாம் கடைசியில் சம்பூரணம் ஆவோம், ஆகையினால் தான் தேவதை களுக்கு அலங்காரத்தைக் கொடுத்து விட்டார்கள். ஏனென்றால் இப்போது நீங்கள் சம்பூரணம் ஆகவில்லை. உங்களுக்கு அலங்காரம் நன்றாகவே இருக்காது. தேவதைகள் சம்பூரணமானவர் கள், ஆகையினால் அவர்களுக்குக் கொடுத்து விட்டார்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுத்த குழந்தைகளுக்கு தாய் தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) எல்லையற்ற நாடகத்தின் இரகசியத்தை புத்தியில் வைத்து எதுவும் புதிதல்ல என்ற பாடத்தை உறுதியாக்க வேண்டும். சப்தத்தைக் கடந்து இருந்து வானப்பிரஸ்த்த நிலைக்குச் செல்ல வேண்டும்.

2) மாயை எதிரியின் மீது வெற்றி அடைவதற்காக சர்வசக்திவான் பாபாவிடமிருந்து சக்தியை அடைய வேண்டும். ஞானக் கண் இல்லாத ஆத்மாக்களுக்கு ஞானக் கண் கொடுக்க வேண்டும்.

வரதானம் : மனதை எண்ணங்கள் அற்றதாகவும் மற்றும் அடக்குவதற்கு பதிலாக நல்ல எண்ணங்களை உருவாக்கக் கூடிய தொலை நோக்கு பார்வையாளர் ஆகுக.

பக்தியில் பக்தர்கள் மிகவும் பயிற்சி செய்கிறார்கள், பிராணயாமம் (மூச்சை கட்டுப்படுத்துதல்) செய்கிறார்கள், மனதை எண்ணங்கள் அற்றதாக மாற்றுகிறார்கள். நீங்கள் அனைவரும் மனதை ஒரு பாபாவின் பக்கம் இணைத்து விடுங்கள், பிஸியாக வைத்துக் கொள்வது போதுமானதாகும். மனதை அடக்குவதில்லை, நல்ல எண்ணங்களை உருவாக்குவதாக மாற்றிவிடுகிறோம். இப்பொழுது உங்களுடைய மனம் உயர்ந்த எண்ணங்களை உருவாக்குகிறது, ஆகையால் நல்ல மனநிலை ஏற்படுகிறது. மனம் அலைபாய்வது நின்றுவிடும். ஒருமுகப்படுத்த முடியும். முதல் - இடை - இறுதி மூன்று காலங்களையும் தெரிந்தவர் ஆகிவிட்டால் தொலை நோக்கு பார்வை யாளர், பரந்த புத்தியுடைவர் ஆகிவிடுவீர்கள், ஆகையால் முயற்சியிலிருந்து (கடின உழைப்பு) விடுபட்டு விடுவீர்கள்.

சுலோகன்: யார் சதா குஷியின் டானிக்கை பருகுகிறார்களோ, அவர்கள் எப்பொழுதும் ஆரோக்கியமானவராகவும் மகிழ்ச்சியானவராகவும் இருப்பார்கள்.